STC.No.192/2023
PW1 – ராஜாங்கம்
நாள் 12.01.2026, 11.30P.M.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் சொன்ன தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த சேமிப்பு கணக்கிலிருந்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனக்கு சொந்தமான நகைகளை அடகு வைத்தும், விவசாயத்திலிருந்து வந்த வருமானத்தை வைத்தும் கடன் கொடுத்தேன். நான் இந்த வழக்கில் நகைகளை அடகு வைத்ததற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டிக்கு பணம் கொடுக்க அரசு அனுமதி வாங்கினேனா என்றால் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. ரூ–20,000/–க்கு மேல் ரொக்க பணமாக கொடுப்பதற்கு வரைவோலை அல்லது காசோலை மூலமாக தான் பணம் கொடுக்கவேண்டும் என்று வருமான வரி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியும்.

**2.** நான் முதல் விசாணையில் கூறியது போல் எதிரி ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் எதிரி எனக்கு எவ்வித காசோலையோ, புரோ நோட்டோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மைத்துனர் தான் எஸ்.கீரந்தை ஊரின் ஊராட்சி தலைவர் என்றால் சரிதான். இவ்வழக்கில் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள காசோலையில் நான் தான் எதிரியின் வீட்டிற்கு சென்று காசோலையை எடுத்து அதில் கையொப்பம் செய்து வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**3.** எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் வருடத்தில் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. 09.04.2023ம் தேதி எதிரி என்னிடம் ரூ.26,80,000/– கேட்டார் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. 09.04.2023ம் தேதி அன்றே நான் என்னுடைய வீட்டில் வைத்து எதிரிக்கு ரூ. 26,80,000/– கொடுத்தது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் 20 வருடமாக வெளிநாட்டில் டிரைவராக இருந்தேன். தற்போது ஊருக்கு வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 7 வருடங்கள்

ஆகிறது. தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் கே.பி கண்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தில் சூப்பர்வைசராக இருந்து வருகிறேன்.

**4.** எதிரி கிராம நிர்வாக அலுவலர் என்பதால் அரசு புறம்போக்கு நிலத்தை எனது பெயரில் பட்டா வாங்குவதற்கு எதிரியிடம் கேட்டதற்கு எதிரி மறுத்ததற்கு எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே தொகைக்காக எதிரி மீது பரமக்குடி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 68/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து பின்னர் என்னால் திரும்ப பெறப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய நிரூபன வாக்குமூலத்தில் பணம் கொடுத்தது யார் முன்னிலையில் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

**5.** நான் உண்மையாக பணம் கொடுத்திருந்தால் சாட்சிகளை பெயரை குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றும், பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் என்னால் கூற முடியவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் பணம் எதுவும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்பதால் வழக்கானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி